1970 ஆகஸ்ட் 25]

தாளவாடி பகுதியில் முசுக்கொட்டை மரங்கள் பயிரிடுதல்

* 18 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாளவாடி பகுதியில் முசுக்கொட்டை மரங்களைபெரிய அளவில் வளர்க்கும் திட்டம் ஏதாகிலும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1967-ம் ஆண்டு, கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு பெரிய அளவு பட்டுப்பண்ணை ஆரம்பிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அந்த மூன்று பண்ணைகளில் கோவை மாவட்டம் தாளவாடி பகுதியில் உள்ள பண்ணை ஒன்றாகும். அப்பண்ணையை 800 ஏக்கர் நிலத்தில் உண்டாக்குவதாக திட்டம். இது வரை 180 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்றாண்டுக்காலத்தில் இப்பண்ணை முழு வளர்ச்சி அடையும்.

* **திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் மூன்று ஆண்டுக் காலத்தில் திட்டம் விரைவுபடுத்தப்படும் என்றார்கள். 800 ஏக்கர் என்பதைவிட அதிகமான அளவிற்கு பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாளவாடி, ஹோசூர் பகுதிகளில் இந்தச் செடியை வளர்க்க ஆங்காங்கேயுள்ள விவசாயிகளுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. அரசாங்கமும் பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். தனியார் யார் யார் இந்தச் செடியைப் பயிரிட முயற்சிகள் எடுக்கிறார்களோ, அவர்களுக்கும் உதவிகள் அளிக்கவேண்டும் என்கிற திட்டத்தை டைரக்டர் ஆப் ஹாண்ட் லூம்ஸ், நிறைவேற்றி வருகிறார்கள்.

சென்னை—நாகப்பட்டினம் அரசுப் பேருந்துகள்

* 19 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்துகளின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே. கிழக்குக் கடற்கரைச் சாலையில் மரக்காணத்திற்குப் போவதில் அருகே பக்கிங்காம் கால்வாயில் பாலம் அமைப்பதால் 15 மைல்களும், சிதம்பரத்